(2) தமிழ்நாட்டிலுள்ள கண் பார்வையற்றவர்களுக்கு வயது வரம்பின்றி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மருத்துவமனை, பள்ளி மற்றும் பிற பயணங்கள் மேற்கொள்வதற்கு, அவர்களது இல்லத்திலிருந்து சென்று திரும்பிவர இலவச பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. மேலும் கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலை போன்ற இடங்களுக்குச் சென்று திரும்பிவர இச்சலுகை பார்வையற்றவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

(3) உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு அவர்களது ஊனம் 50 விழுக்காடுக்கு கூடுதலாயிருந்தால், அவர்களது இருப்பிடத்திலிருந்து பள்ளி மற்றும் மருத்துவமனைகளுக்குச் சென்று திரும்பிவர இலவச பயண சலுகை அனைத்து பேருந்துகளிலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர வழங்கப்படுகிறது.

(4) அரசால் ஒப்பளிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் மனவளர்ச்சியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவ்வில்லத்திலிருந்து மருத்துவமனை மற்றும் பள்ளிக்குச் சென்று வரவும் அவர்களுக்கு துணை செல்லும் நபருக்கும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர இலவச பயண சலுகை வழங்கப்படுகிறது.

(5) ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களுக்கு அவர்களது மாத ஊதியத்தில் 5% அல்லது ரூ. 50-க்கு மிகையாகாமல் அவர்களுக்குப் பயணப்படியாக வழங்க அரசு ஆணை எண் 667 நிதி (ஊதியக்குழு), நாள் 28—6—89-ல் ஆணை வெளியிடப்பட்டது.

(6) 4—12—85 அன்று நடைபெற்ற மாநில உடல் ஊனமுற்றோர் நல வாரியத்தின் இரண்டாவது குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமான காது கேளாதோர்/உடல் ஊனமுற்றவர்/தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள்/மூளை வளர்ச்சி மனநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை வழங்க வேண்டும் என்பது குறித்து அரசு பரிசீலித்தபோது தற்போதுள்ள அரசின் நிதி நிலைக் காரணமாக அனைத்து உடல் ஊனமுற்றவர்களுக்கும் இலவச பயண சலுகை வழங்கினால் நிதி நெருக்கடி ஏற்படும் எனக் கருதி இச்செயற்குறிப்பினை நிராகரித்துள்ளது.

காசநோய் மருத்துவமனை.

*3803—திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்புப் பதியிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காச நோய் மருத்துவ மனையில் இயங்கி வந்த எக்ஸ்ரே படக் கருவி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சரியான மருத்துவ சிகிச்சை பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே,

ஆம். இது சம்பந்தமாக, புளியந்தோப்பு பகுதி மருத்துவ மனையிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ரே படக்கருவிக்குப் பதிலாக, சென்னை நகர காச நோய் சங்கம் புதிய எக்ஸ்ரே படக்கருவியை வாங்க ரூ. 2,75,000 ஒதுக்கியுள்ளதையடுத்து புதிய படக்கருவி ஒன்று வாங்கப்பட்டு புளியந்தோப்பு மருத்துவமனையில் பொருத்தப்படும் நிலையில் உள்ளது. வெகு விரைவில் செயல்படத் துவங்கும்.

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி.

*5125—திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் கூடுதலாக படுக்கை வசதி செய்து தர அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

9-45 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது திருவண்ணாமலை, மாவட்டத்தின் புதிய தலைநகராக மாறியிருக்கிறது. அங்கேயுள்ள மருத்துவமனைக்கு மாவட்டத்திலிருந்து வரும் நோயாளிகளுக்கு இடம் இல்லாத நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. தாலுக்கா மருத்துவமனை போலவே இன்றையதினமும் அந்த மருத்துவமனை இருப்பதால், பொது மக்களுக்கு ஏற்படும் பிரச்சினையை மனதிலே கொண்டு, மாவட்ட மருத்துவமனை அளவுக்குப் படுக்கை வசதிகளை அதிகரிக்க அரசு முன்வருமா ?